# 29-11-2024 செய்தி

## தீர்வல்ல, கண் துடைப்பு!

**1.3 லட்சம் கோடி கேட்டல்**

- மத்திய ஆசிய நாடான அசர்பைஜான் தலைநகர் பாகுவில் நடைபெற்ற 29 –ஆவது பருவநிலை உச்சி மாநாடு இந்தியா உள்ளிட்ட தெற்குலக நாடுகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி, பிரிந்திருக்கிறது.
- அசர்பைஜான் பாகு பருவநிலை மாநாட்டில் அறிவிக்கப்பட்டிருக்கும் தெற்குலகுக்கான வருடாந்திர ரூ. 3ஆயிரம் கோடி டாலர் பருவ நிலை நிதித் தொகுப்புக்கு வளரும் நாடுகளின் குரலாக இந்தியா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.
- கடந்த மூன்றாண்டுகளாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தெற்குலகம் கோரிவரும் 1.3 லட்சம் கோடி டாலர் நிதியுடன் ஒப்பிடும்போது, பாகு மாநாட்டின் முடிவு ‘யானைப்பசிக்கு சோளப்பொறி’ என்பதல்லாமல் வேறென்ன?
- 29 –ஆவது பருவநிலை உச்சிமாநாட்டில் தற்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஷி ஜின்பிங், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான், ஜெர்மனி பிரதமர் ஓலாஃப் ஷோல்ஸ், இந்திய பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கியமான தலைவர்கள் பங்கேற்கவில்லை எனும்போதே, அந்த மாநாடு முக்கியத்துவத்தை இழந்து விட்டது.

**சிறு தீவுகள் புவி வெப்பமாதல் – 1992**

- 23 நாடுகளும், ஐரோப்பிய கூட்டமைப்பும் 1992 –இல் முன்மொழிந்த வழிமுறைகள் இப்போது ஒருமித்த கருத்தில்லாமல் முடிவுக்கு வந்திருக்கிறது. பருவநிலை மாற்றப் பிரச்னை அப்படியே தொடரும் என்பதுதான் இதன் பொருள். வளரும் நாடுகளின் கருத்துக்கு மதிப்பளிக்காமல், ஓர் ஒப்பந்தம் உலகின் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.
- புவி வெப்பமயமாதல் காரணமாக, உலகின் பல பகுதிகளிலும் வறட்சி உருவாகியிருக்கிறது. கணிக்க முடியாத பருவச் சூழல் காரணமாக, அதிக அளவு மழை, கடுமையான புயல்கள், அவ்வப்போது வெள்ளப்பெருக்கு, மேக வெடிப்பு, காட்டுத் தீ பரவுதல், பனிச்சிகரங்கள் உருகுதல், கடல்மட்டம் அதிகரித்தல் போன்றவை வரலாற்றில் இதுவரை காணாத அளவுக்கு அடிக்கடி நிகழத் தொடங்கியிருக்கின்றன. அதன் காரணமாக, பல்வேறு நாடுகள் அதிகமான இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொண்டு பொருளாதார நெருக்கடிக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.
- பசிபிக் கடலிலும், அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியிலும் உள்ள நூற்றுக்கணக்கான சின்னஞ்சிறு தீவுகள் எந்த நேரமும் மூழ்கலாம் என்கிற அபாயத்தை எதிர்கொள்கின்றன. சிறிய தீவு நாடுகள் கூட்டமைப்பு பேரழிவைச் சந்திக்க நேரிடும் அச்சத்தில் இருக்கும் நிலையில், பாகு பருவநிலை உச்சிமாநாட்டு தீர்மானம் அந்த நாடுகளை ஆத்திரப்படுத்தியிருப்பதில் வியப்பில்லை.
- கடல்மட்டம் உயர்வதால் அழிந்துவிடும் ஆபத்தை எதிர்கொள்ளும் ஒருசில தீவு நாடுகளின் உறுப்பினர்கள் மாநாட்டில் இருந்து வெளிநடப்பு செய்தனர். மிக அதிகமான சுற்றுச்சூழல் பாதிப்புக்கும், பசுமை இல்ல வாயு வெளியேற்றத்துக்கும் காரணமான பணக்கார நாடுகள் அந்தச் சிறிய தீவு நாடுகளுக்கு வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றவே தவிர, அவற்றின் அச்சத்தைப் போக்குவதற்கான முன்னெடுப்பை முழு மனதுடன் மேற்கொள்ளவில்லை.
- புதைபடிம எரிபொருள் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் அசர்பைஜான் பருவநிலை மாற்ற மாநாட்டுக்குத் தலைமை வகித்தது என்பதே மிகப் பெரிய முரண்.
- மாநாட்டின் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு தெற்குலக நாடுகள் பேச அனுமதிக்கப்படவில்லை.
- பருவநிலை மாற்றத்தால் வளரும் நாடுகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அவற்றின் வளர்ச்சி தடைபட்டாலும்கூட, குறைந்த கார்பன் உமிழ்வை நோக்கிய பாதைகளை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
- ஏற்கனவே கரியமில வாயு உமிழ்வு மூலம் தங்களை வளர்ச்சி அடைந்த நாடுகளாக மாற்றிக் கொண்டுவிட்ட மேற்குலக நாடுகள், வளர்ச்சி அடையும் நாடுகள் கரியமில வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறுவதுதான் மிகப் பெரிய வேடிக்கை புவியின் வெப்பநிலை அதிகரிப்பு 1.5 டிகிரி செல்சியஸை தாண்டாமல் தடுப்பதற்கு, பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் வளர்ச்சி அடையும் நாடுகளுக்கு இழப்பீட்டை உறுதிப்படுத்த வேண்டும்.
- வளரும் நாடுகளுக்கு ஆண்டொன்றுக்கு 10 கோடி டாலர் வழங்குவதை 2035 –க்குள் 30 கோடி டாலராக அதிகரிப்போம் என்கிற முடிவு நகைப்பை வரவழைக்கிறது. 11 ஆண்டுகள் கால அவகாசமும், அந்த நிதியை வழங்கப் போவது யார் என்பதில் தெளிவின்மையும் பாகு உச்சிமாநாட்டின் தீர்மானம் வெறும் கண்துடைப்பு என்று இந்தியா மட்டுமல்ல, அதன் நிலைப்பாட்டை ஆதரிக்கும் 130 நாடுகளும் கருத்துத் தெரிவிக்கின்றன.